# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க,
# பொலிசு (திருத்தச்) சட்டம்

---

*[1984, நவம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, நவம்பர் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 — தபாற் செலவு : சதம் 60

## 1984 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பொலிசு (திருத்தச்) சட்டம்

[1984, நவம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ.—45/83—1620

## பொலிசுக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1984 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, பொலிசு (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. பொலிசுக் கட்டளைச்சட்டத்தின் 77 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— 53 ஆம் அத்தியாயத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவையும், (2) ஆம் உட்பிரிவையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

" (1) எந்த இடத்தில் அவ்வூர்வலம் தொடங்கவுள்ளதோ அந்த இடத்திற்கண்மையிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு, அத்தகைய ஊர்வலம் தொடங்கும் நேரத்திலிருந்து ஆகக் குறைந்தது ஆறு மணித்தியாலங்களுக்கு முன்பாக அத்தகைய ஊர்வலம் பற்றிய எழுத்திலான அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, ஏதேனும் இடப்பரப்பிலுள்ள ஏதேனும் பகிரங்க இடத்தில் ஊர்வலமெதுவும் ஏற்பாடுசெய்யப்படுதலோ நடைபெறுதலோவாகாது :

ஆயின் அமைச்சரால் ஆக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் இந்த ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் விவரணத்தையுடைய ஏதேனும் ஊர்வலத்தின் விடயத்தில், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளதெதுவும் ஏற்புடையதாதலாகாது.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றதான ஊர்வலமெதுவும் ஏற்பாடுசெய்யப்படுமிடத்து அல்லது நடைபெறுமிடத்து அவ்வூர்வலத்தை அமைக்கின்ற அல்லது அவ்வூர்வலத்தை அமைப்பதில் அல்லது கூட்டுவதில் துணை நிற்பதான ஏதேனும் செயலைச் செய்கின்ற ஒவ்வோராளும் அத்துடன், அத்தகைய ஏதேனும் ஊர்வலத்தில் இடம்பெறுகின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். ";

2—எ 079159—2,760 (09/84)

(ஆ) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(5) இப்பிரிவின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் ஆள் ஒவ்வொருவரும், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு, அத்தகைய காலப்பகுதியானது, நீதிவானொருவர் தனது சாதாரண நியாயாதிக்கத்தினைப் பிரயோகிப்பதில் விதிக்கக்கூடியதான மறியற்றண்டனைக் காலப் பகுதியை விஞ்சுவதாக இருப்பினும், இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.".